**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.10/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : கோவிந்தசாமி |
| Father's Name/ Husband's Name | : ராஜாராம் |
| Village & Taluk | : பழையகவருவாட்சி |
| Calling | : வியாபாரம் |
| Age | : 41 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026**

1,3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

1. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 04.00 மணியளவில் கடைக்கு வருவதற்காக எனக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது CN பாளையம் காளியம்மன் கோவில் அருகே சில நபர்கள் என்னை வழி மறித்து என்னிடம் இருந்த ரூ.5000/– மற்றும் செல்போனை பிடுங்கி கொண்டார்கள். என்னிடம் வழிபறி செய்த நபர்கள் யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை அவர்கள் அப்போது முககவசம் அணிந்திருந்தார்கள். இது தொடர்பாக அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அதன் பின்னிட்டு என்னிடம் இருந்து களவாடப்பட்ட செல்போன் மற்றும் பணம் கிடைத்துவிட்டதாக கூறினார்கள். அதன் பேரில் நான் அதனை இந்நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுவிட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன் மற்றும் பணம் ஆகியவைகளை தான் நான் மனு செய்து பெற்றுக்கொண்டது **மேற்படி செல்போன் மற்றும் பணம் ரூ.5000 அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கும் அவர்களுக்கும் இடையே இவ்வழக்கிற்கு முன்னிட்டு முன் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவம் மாலை நேரத்தில் நடைபெற்றது. சம்பவத்தின்போது சுமார் 20 நபர்கள் இருந்தார்கள். என்னிடம் வழிப்பறி செய்த நபர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை, அவர்கள் அப்போது முகககவசம் அணிந்திருந்தார்கள். எதிரிகள் மீது சந்தேகத்தின் பேரில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவலர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். காவலர்கள் என்னிடம் வழி பறியில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் தெரியவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/−B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.